**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 212** **நாள் :16.12.2024**

**தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, இளங்கலை கல்லூரி மாணவியருக்கான கல்லூரிகளுக்கிடையேயான வினாடி வினாப் போட்டி நுங்கம்பாக்கம், கிறிஸ்துவ மகளிர் கல்லூரியில் 18.12.2024 அன்று நடைபெறவுள்ளது.**

இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்ட நாளான ஜனவரி மாதம் 25ஆம் நாள் தேசிய வாக்காளர் தினமாக இந்திய தேர்தல் ஆணையத்தால் கொண்டாடப்படுகிறது. 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்ப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாக விளங்குகிறது.

இந்த ஆண்டு தேசிய வாக்காளர் தினம் 25.01.2025 அன்று கொண்டாடப்படுகிறது. இக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இளங்கலை பயிலும் கல்லூரி மாணவிகளுக்கு கல்லூரிகளுக்கிடையேயான வினாடி வினாப் போட்டி சென்னை, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள கிறிஸ்துவ மகளிர் கல்லூரியில் (Women's Christian College) 18.12.2024 புதன்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்போட்டியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு கல்லூரிகளில் இளங்கலை பயிலும் சுமார் 200 மாணவிகள் பங்கேற்க உள்ளனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**